மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் அப்படிப்பட்ட பதப் படுத்தும் தொழிற்சாலை அமைக்கின்ற முடிவு இல்லை என் பதைத்தான் முன்பு கூறி இருக்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாம்பழத்தைப் பொறுத்தவரையில் அது விரைவிலே கெட்டுவிடுகின்ற பழம். அப்படிப்பட்ட அந்தப் பழத்தை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்கள் அதைப் பாது காக்கின்ற அளவுக்கு வேண்டிய வசதிகள் இல்லாத காரணத் தால் மிகவும் நஷ்டம் அடைகின்றார்கள். அப்படிப்பட்ட அந்த விவசாயப் பெருமக்களினுடைய குறையை நீக்குகின்ற அளவுக்கு ஒரு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்துத் தரவும், மேலும் இந்த மாம்பழங்களை எல்லாம் வெளிநாட் டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய வசதிகளையும் அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஹோசூர், மற்றும் கிருஷ்ணகிரியில் மாம்பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை இருக்கின்றது. தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழம் ஏறத்தாழ 10,703 ஹெக்டேர் நிலத்தில்தான் பயிரிடப்பட்டு இருக் கிறது. இந்தப் பழத்திற்கு 3 மாத காலத்திற்குத்தான் சீசன் இருக்கிறது. இப்போது ஹோசூரிலும், கிருஷ்ணகிரியிலும் இருக்கக்கூடிய மாம்பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை களுக்கு மாம்பழம் போதுமான அளவில் வருகிறது. மேலும் தனியார் இதுபோன்ற தொழிற்சாலை தொடங்க முன்வரு வார்களேயானால், அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

முல்லைவாடி விதைப்பண்ணையில் ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துதல்

* **3537** திரு. ஏ. எம். இராமசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் வட்டம், முல்லைவாடி விதைப் பண்ணையில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

அரசு தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான ஆத்தூர் முல்லைவாடி விதைப்பண்ணையில் ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் இல்லை. அப்படி இருக்குமேயானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1990 மார்ச் 23]

9.50 மணி

திரு. ஏ. எம். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய நிலத்தின் பரப்பு கிட்டத்தட்ட 200 ஏக்கர் ஆகும். அதில் 57 பேர் ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்குச் சொந்தமான நிலத்திற்கு மின்னிணைப்பும் பெறுவதற்கு அரசு அலுவலாளர்களுடைய ஒப்பந்தம் வாங்கி, ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மின்னிணைப்பும் அவர்களுக்குக் கொடுத்துவிட்ட பிறகு, அது என்னுடைய கவனத்திற்கு வந்தபிறகு, அதைத் தடுத்து நிறுத்தி, அந்த மின்னிணைப்பையெல்லாம் இப்பொழுது டிஸ்கனெக்ட் செய்திருக்கிறார்கள். 200 ஏக்கரா நிலத்தில் உள்ள அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, நிலத்தை முன்பு அரசு எடுத்து அதிலே குத்துவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சிப் பண்ணையாக வைத்திருந்தார்கள். அதை அரசு மீண்டும் நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பண்ணைக்காக 328.57 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. இதில் தோட்டக் கலைக்கு 119.55 ஏக்கரும், இலங்கை அகதிகளுக்கு 60 ஏக்கரும், வருவாய்த் துறைக்கு 149.03 ஏக்கரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது தோட்டக் கலையின் மூலமாக நல்ல பழப் பண்ணை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எம். இராமசாமி அவர்கள், சிலர் ஆக்கிரமிப்பு செய்வதாக என்னிடத்திலே கூட தெரிவித்தார்கள். நானும் அரசாங்க அலுவலர்களிடத்திலே எடுத்துக் கூறி, ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக அவர்களை அகற்றிவிட்டு, பழப் பண்ணைக்கு அந்த இடத்தைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராமசாமி : தலைவரவர்களே, ஆக்கிரமிப்பாளர்கள் 57 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கும் நிலம் போக மீதமுள்ள நிலத்தை இப்பொழுது பழப் பண்ணைக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். மீதம் உள்ள நிலங்கள் அனைத்தும் சும்மாதான் இருக்கிறது. அதையும் அரசே எடுத்து, பழப் பண்ணையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, அரசு அலுவலர்கள், எனக்குத் தந்த குறிப்பு ஆக்கிரமிப்பு இல்லை என்பது. இருப்பினும், மாண்புமிகு

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த தன் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர், தோட்டக் கலை இயக்குநர், ஆகியவர்களை அழைத்துப் பேசி, ஆக்கிரமிப் பாளர்கள் யாராக இருந்தாலும் அகற்றி, அந்த நிலம் பழப் பண்ணைக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். வருகின்ற 27ஆம் தேதி கூட ஆத்தூருக்குச் செல்ல இருக்கின்றேன். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினரோடு அந்தப் பழப் பண்ணைக்குச் சென்று ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து, அப்படியிருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுப்பணித்துறை காவிரிக் கோட்டத்தில் முறைகேடு.

* 2581 திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1986–87-ல் பொதுப்பணித்துறை காவிரிக் கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் முறை கேடு நடைபெற்றதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) ஆம். புகார் வந்துள்ளது.

(ஆ) 1986-87-ல் காவிரி கோட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட வேலைகளில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் (Vigilance and Anti-corruption) ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1986-87-இல் பொதுப்பணித் துறை காவிரிக் கோட்டத்தின் மூலமாக நடைபெற்ற அந்த வேலைகளில் எந்தெந்த ஆறுகளில் அல்லது வாய்க்கால்களில் தூர் வாரிய பணியில் முறைகேடுகள் நடைபெற்றன? நெய்வேலி காட்டாமணி என்ற ஒரு செடியை வெட்டுவதாகச் சொல்லி, வெட்டாமலேயே பில் போடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறதே, அவையெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அந்த வேலையினுடைய மதிப்பு எவ்வளவு? அதில் சம்பந்தப்பட்ட அதிகாரி